தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 8, சுபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034

2003 ஏப்ரல் 21, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை *10-00* மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை."

பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று நாள் கடத்தாமல் அறவழியை மேற்கொண்டால் அது ஒருவர் மறைந்தபின்கூட அழியாப் புகழாய் நிலைத்துத் துணை நிற்கும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் *261*, திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

261—

புதிய பாலம்

•9908-திரு. கே.எஸ். தென்னரசு:

மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு நகரத்தையும் பள்ளிப்பாளையம் நகரத்தையும் இணைக்கும் புதிய பாலம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்பகுதியில் ஏற்கெனவே ஆர்.சி.சி. பாலம் கட்டப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் அம்மா இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். ஈரோடு மாவட்டத்தையும், நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையத்தையும் இணைக்கும் பாலம் மிகவும் சிறியதாக இருப்பதனாலும், இரு நகரங்களுக்கும் வர்த்தகத் தொடர்பு தினசரி அதிகமாகவும், வாகனங்கள் அதிகமாகவும் இருப்பதாலும், அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு போக்குவரத்து இடையூறு ஏற்பட்டு வருவதாலும் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்தப் பாலம் சுமார் 43 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி, ஆத்தூர், விழுப்புரம், வேலூர், பாண்டிச்சேரி, தருமபுரி, சென்னை போன்ற நகரங்களுக்கு எல்லாம் செல்வதற்கு இந்தப் பாலமே முக்கிய வழியாக இருப்பதால், இந்தச் சிறிய பாலத்திற்கு அருகிலே மேலும் ஒரு பாலத்தை—இந்த நிதி ஆண்டிலாவது பரிசீலித்து மீண்டும் ஒரு பாலத்தை—கட்டி, பள்ளிப்பாளையம் மக்களின், ஈரோடு மக்களின் நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்க மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்று உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு நகரத்தையும், பள்ளிப்பாளையம் நகரத்தையும் மல்லிகரை, ஆத்தூர், ராசிபுரம், திருச்செங்கோடு, ஈரோடு சாலை, மாநில சாலை எண் 79-ல் இணைக்கிறது. இச்சாலையில் கிலோ மீட்டர் 94/245 முதல் 660-ல் குறுக்கிடும் காவிரி ஆற்றில் ஏற்கெனவே ஆர்.சி.சி. பாலம் கட்டப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. மேலும் பள்ளிப்பாளையம் அருகே ஓடப்பள்ளி என்கிற இடத்தில் பவானி கட்டளைக் கதவணை நீர் மின் திட்டம் இரண்டின்கீழ் காவிரி ஆற்றின் குறுக்கே 4 மீட்டர் அகலத்தில் தமிழ்நாடு மின்சார வாரியம் கதவணை ஒன்று கட்ட இருக்கிறது. அதை 12 மீட்டர் அகலத்தில், கதவணையும், பாலமும் இணைந்ததாகக் கட்டலாமா என்பதை அரசு

2003 ஏப்ரல் 21]

ஆய்வு செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த நிதி ஆண்டிலாவது இந்தப் பணிக்கு முன்னுரிமை கொடுத்து அமைச்சர் அவர்கள் செய்வதற்கு முன்வருவாரா என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, இந்தப் பாலத்தினுடைய அவசியம் கருதி இது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 262, திரு. ப. சிதம்பரம், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

262—

சாலையைச் செப்பனிடுதல்.

•12958—திரு. ப. சிதம்பரம்:

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதி, புன்செய் புளியம்பட்டியிலிருந்து உக்கரம் வழியாக சத்தியமங்கலம் செல்லும் சாலையைச் செப்பனிட உடனடியாக அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இப்பணியினை எதிர்வரும் ஆண்டுகளில் நிதிநிலைமைக்கேற்ப மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ப. சிதம்பரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்திற்கு வருகை புரிந்து ரூ.425 கோடியில் அரசு